

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி மயிலம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கூட்டேரிப்பட்டில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார் . உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் , தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மயிலம் வடக்குஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகர கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழகத்தின் பவள விழா ஆண்டை முன்னிட்டு, ஜெயங்கொண்டம் நகரில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, ஜெயங்கொண்டம் நகரக் கழகத்தின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்ட கொடிக்கம்பத்தில் கழக இருவண்ண கொடியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் சா.சி.சிவசங்கர் ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஜெயங்கொண்டம் நகரக் கழக செயலாளர் நகர் மன்ற துணைத் தலைவர்வெ.கொ.கருணாநிதி, ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன்,மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### மாநில மாணவர் அணி துணை செயலாளர்கள் சி.ஜெரால்டு, சேலம் ரா.தமிழரசன், பி.எம்.ஆனந்த் பங்கேற்பு !

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணிக்கு நேர்காணல் !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

திருச்சி, செப்.25-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ அறிவிப்பின்படி திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்ட மன்றத் தொகுதிகளுக்கு 27.09.2024



வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்காணல் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

மாவட்ட கழக செயலாளர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையிலும், மாநில துணை செயலாளர் சி.ஜெரால்டு, சேலம்.ரா. தமிழரசன், பி.எம்.ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் நேர்காணல் நடைபெறும், பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்புகளுக்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

அதில், (பெண்) கட்டாயமாக ஒரு நபர் துணை அமைப்பாளராக நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புக்கு விண்ணப்பிப்பவர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் கல்லூரி படிப்பை முடித்திருக்க வேண்டுமெனவும், அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி முறைகளை பின்பற்றி, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக அளவிலான மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் 24.09.2024 முதல் 26.09.2024 வரை விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு அதனை பூர்த்தி செய்து மாவட்ட கழக அலுவலகத்தில் அளித்து, நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்ட

# பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச்செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், செப்.25-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களுக்கு, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்டக் கழக செயலாளர்-அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்ப முள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டுகிறோம்.

1.விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2.விண்ணப்பிப்பவர்கள்



அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3.ஒரு அமைப்பாளர். ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கப்படுகின்றனர்.

4.பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.

எனவே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணிநிர்வாகிகள் மேற்கண்ட விதி முறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



காரைக்காலில் தி.மு.க. முப்பெரும் விழாவில் மாநில கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் இறகு பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ.,பரிசுகள்,மெடல்கள், கேடயங்கள் வழங்கி சிறப்பித்தார்.

### முப்பெரும் விழாவையொட்டி

# காரைக்காலில் மாபெரும் இறகுப் பந்துப் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு ஏ.எம்.எச்.நாஜிம் பரிசு வழங்கினார்!

காரைக்கால், செப்.25-

காரைக்கால் மாநில தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திமுக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாபெரும் இறகு பந்து போட்டி காரைக்கால் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் ஜி.செல்வராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. போட்டியில் புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள வீரர்கள் வீராங்கனைகள் பங்கு பெற்றனர். ஆண்களுக்கு முதல் பரிசு ரூ 10000 இரண்டாம் பரிசு ரூ.8000 மூன்றாம் பரிசு 6 ஆயிரம் நான்காம் பரிசு 4000 வழங்கப்பட்டது.

பெண்களுக்கு முதல் பரிசு ரூ 10000 இரண்டாம் பரிசு 8000 மூன்றாம் பரிசு 6 ஆயிரம் நான்காம் பரிசு 4 ஆயிரம் வழங்கப்பட்டது ஆண்களுக்கான முதல் பரிசை காரைக்கால் மாநிலம் வென்றது. அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் சுழற்கோப்பை வழங்கப்பட்டது.

பெண்களுக்கான பிரிவில் புதுச்சேரி மாநிலம் முதலிடம் பெற்றது. அவர்களுக்கு ரொக்க பரிசாக ரூ 10,000 மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு அணி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுழற்சி கோப்பை வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் காரைக்கால் மாநில தி.மு.க. அமைப்பாளரும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்

இந் நிகழ்ச்சியில் இளைஞர் அணி அமைப்பாளர் ரிஃபாஸ் மாணவரணி அமைப்பாளர் ஜவகர் இலக்கிய அணி அமைப்பாளர் அமுதா ஆறுமுகம் விவசாய அணி அமைப்பாளர் பிரபு வர்த்தக அணி அமைப்பாளர் கந்தாஸ் ராஜா தலைமை பொதுக்குழு உறுப்பினர் அக்கரை வட்டம் ஆனந்த்திருப்பட்டினம் தொகுதி செயலாளர் வெற்றிச்செல்வன் மீனவர் அணி அமைப்பாளர் வீரதாஸ் மற்றும் விளையாட்டு அணியினுடைய துணை அமைப்பாளர்கள் ராஜூ அந்தோணி ராஜ், சந்துரு குமார், விக்கி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ரிஷிவந்தியம் அரசுக்கல்லூரி வளாகத்தில்

# தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அழைப்பு!

ரிஷிவந்தியம், செப். 25-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில நகர்ப்புற ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து



தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமை வருகின்ற செப்.28ம் தேதி சனிக்கிழமை அன்று நடத்துகின்றனர், ரிஷிவந்தியம் தொகுதி,வாணாபுரம் வட்டத்திற்கு உட்பட்ட அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரியில் அன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை முகாம் நடைபெறுகிறது, இதில் தொழில்துறை, சேவைத் துறை, விற்பனைத்துறை போன்ற தமிழக அளவிலும், கள்ளக்குறிச்சி மற்றும் மாவட்டத்தின் அருகில் அமைந்துள்ள 100க்கும் மேற்பட்ட பல்வேறு முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலி பணியிடங்களை நேரடி நேர்காணல் மூலம் தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளன. இத்தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் ஓட்டுநர் உள்ளிட்ட 8, 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றோர், தோல் வியடைந்தோர், பிளஸ் 2, ஐடிஐ, டிப்ளமோ, அக்ரி, செவிலியர், ஆசிரியர் தகுதி, ஹோட்டல் மேனேஜ்மெண்ட், இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகள் மற்றும் பொறியியல் படித்த 18 முதல் 40 வயதுக்குட்பட்ட வேலை நாடுநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ளலாம், முகாமில் பங்கேற்போர் சுய விவர குறிப்புகள், அனைத்து கல்வி சான்றுகளின் நகல்கள், ஆதார் அட்டை, பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் பங்கேற்கலாம். மேலும், முகாம் குறித்த விவரங்களுக்கு 8807204332, 04151295422 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம், ஆகவே ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் இந்த அரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிக்கையின் மூலம்

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ அழைப்பு விடுத்துள்ளார்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூர் பகுதி,சிட்லிங் மலைதாங்கி,பொன்னேரிபுதூர்வெளம்பட்டி உள்ளிட்ட இடங்களுக்கு ரூ.6.50 கோடி மதிப்பில் தார்ச் சாலைகள் அமைக்கும் பணியினை மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி அரூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ.சந்திரமோகன் ஏற்பாட்டில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட துணை செயலாளர் செ.கிருஷ்ணகுமார், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.வேடம்மாள், வே.சௌந்தரராசு, அரூர் நகர கழக செயலாளர் முல்லைரவி, துணை செயலாளர் விண்ணரசன், ஐ.டிவிங் தமிழழகன்.உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.


6 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : 10.07.1947

மறைவு : 25.09.2018



தமிழக நவீன சிற்பி பாசத்தலைவர் கலைஞரின் அன்புத்தம்பியாய்

உழைப்பின் சிகரம் தமிழக முதல்வர் தலைவர் தளபதியாரின் - அன்புக்குரியவராய்

கழகத்தின் தடம் மாறா தொண்டராய் வாழ்ந்து மறைந்த

கிருஷ்ணகிரி சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் திரு. P.V.ஸ்ரீராமுலு Ex,M.L.A., -வின் மகன்

முன்னாள் தி.மு.க நகர செயலாளர், ஒன்றிய செயலாளர், மாவட்ட துணை செயலாளர், மாவட்ட அவைத்தலைவர்,

திரு.P.V.S.வெங்கடேசன் Ex,M.L.A.,

காவேரிப்பட்டிணம் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்

1996 - 2001

உங்கள் நினைவில் என்றும்.

PVSV.மணிவிஜயன் B.Sc.,MBA.,

மாவட்ட வர்த்தகஅணி அமைப்பாளர்,கிருஷ்ணகிரி கிழக்கு

திராவிட முன்னேற்ற கழகம்

காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம்.